

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 18-11-2025

# பீகார் பாடமும் எச்சரிக்கையும்!

பீகார் தேர்தல் முடிவு, தேர்தலுக்கு முன்னதாக நடந்த நிகழ்வுகளை இன்னும் உன்னிப்பாக கவனிக்க வைக்கிறது.

**“அனைவருக்கும் பாடங்களை வழங்கி உள்ளது பீகார் சட்டமன்றத் தேர்தல். இத்தேர்தல் முடிவுகள் தேர்தல் ஆணையத்தின் குளறுபடிகளையும் பொறுப்பற்ற செயல்களையும் இல்லாமல் ஆக்கிவிடாது. தேர்தல் ஆணையத்தின் மீதான மரியாதை இதுவரை இல்லாத அளவுக்குக் கீழிறங்கியுள்ளது. வலுவான, நடுநிலையான தேர்தல் ஆணையத்தைக் கோருவது நம் நாட்டு மக்களின் உரிமை. தேர்தலில் வெற்றி பெறாதோரின் நம்பிக்கையையும் பெறும் அளவுக்கு தேர்தல் ஆணையம் நியாயமான முறையில் தேர்தல்களை நடத்திட முன்வர வேண்டும்”** என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

“பீகாரில் இந்த முடிவு உண்மையிலேயே ஆச்சரியமளிக்கிறது. ஆரம்பத்திலிருந்தே நியாயமற்ற முறையில் நடந்த தேர்தலில் நாம் வெற்றி பெற முடியவில்லை. அரசியலமைப்பு மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டம் இது” என்று சொல்லி இருக்கிறார் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி.

“பீகாரில் SIR ஒரு பெரிய தேர்தல் சதி. பா.ஜ.க. அதைப் பயன்படுத்தி ஒரு பெரிய அரசியல் மோசடியைச் செய்துள்ளது. பீகாரில் செயல்படுத்தப்பட்ட SIR விளையாட்டை மேற்கு வங்கம், தமிழ்நாடு மற்றும் உத்தரபிரதேசம் தொடங்கி வேறு எந்த மாநிலத்திற்கும் கொண்டு வர முடியாது. ஏனென்றால் இந்தத் தேர்தல் சதி இப்போது அதிகமாக அம்பலப்படுத்தப்பட்டு உள்ளது. இனிமேல், அவர்கள் இந்த விளையாட்டை மீண்டும் விளையாட நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. CCTV போல நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். பா.ஜ.க.வின் நோக்கங்களை நாம் அம்பலப்படுத்த வேண்டும். பா.ஜ.க. ஒரு அரசியல் கட்சி அல்ல, அது ஒரு மோசடி” என்று உத்திரப்பிரதேச மாநிலத்தில் இருந்து அகிலேஷ் குரல் கொடுத்துள்ளார்.

**பீகாரில் லட்சக்கணக்கான வாக்காளர் பெயர் நீக்கம், அரியானாவில் 25 லட்சம் போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டது, பிரேசில் பெண் ஒருவரது பெயர் அரியானா மாநில வாக்காளர் பட்டியலில் இருப்பது, மகாராஷ்டிரா தேர்தல் மோசடி, கர்நாடகா மகாதேவ்புரா தொகுதி போலி வாக்காளர் சேர்ப்பு என்று வெளியாகும் தகவல்கள் அனைத்தையும் சாதாரணமாகக் கடந்து விடக் கூடாது. இது அந்த மாநிலத்தின் பிரச்சினை மட்டுமல்ல; இந்தியாவின் பிரச்சினை. இந்திய ஜனநாயகத்தைக் கேள்விக்குறியாக்கும் பிரச்சினை ஆகும்.**

அனைத்து மோசடிகளையும் அரங்கேற்றிவிட்டு பீகார் தேர்தலை நடத்தியது தேர்தல் ஆணையம். சிறுபான்மையின மக்களையும், பா.ஜ.க.வுக்கு எதிரான வாக்காளர்களையும் வாக்குரிமை அற்றவர்களாக மாற்றுவதுதான் தேர்தல் ஆணையத்தின் SIR - பணி.

பீகாரில் பிறப்புச் சான்றிதழ் பெறுவோர் குறைவு. படித்தோர் குறைவு. எனவே அவர்களால் தேர்தல் ஆணையம் கேட்கும் விபரங்களைத் தர இயலவில்லை. 1985 ஆம் ஆண்டுக்கு பிறகு பிறந்தவர்கள் தங்களது ஆவணத்தை மட்டும் இன்றி தங்களது பெற்றோர்களின் ஆவணத்தையும் சேர்த்து சமர்ப்பித்தால் தான் வாக்காளர் பட்டியலில் அவர்களின் பெயர் இடம் பெறும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. பீகார் இளைஞர்கள் பல்வேறு மாநிலங்களில் தற்காலிக வேலைகளுக்காக போய்விட்டார்கள். அவர்களால் ஆதாரங்களை ஒரு மாதத்துக்குள் கொடுக்க முடியவில்லை.

**பீகாரில் 19.65 விழுக்காடு மக்கள் பட்டியலினத்தைச் சேர்ந்தவர்கள். 17.7 விழுக்காடு மக்கள் இஸ்லாமியர்களாக உள்ளனர். இவர்களைக் குறி வைத்தே இந்த நடவடிக்கையை தேர்தல் ஆணையம் செய்ய நினைத்தது. அதனை நிறைவேற்றியது. பா.ஜ.க.வும் தேர்தல் ஆணையமும் கூட்டாகச் சேர்ந்து செய்யும் சதி ஆகும்.**

தேர்தல் ஆணையம் ஒவ்வொரு தொகுதியிலும் மொத்த வாக்குகள் எவ்வளவு, பதிவானது எவ்வளவு என்பதைச் சொல்லவே இல்லை.

முதற்கட்ட வாக்குப் பதிவு நவம்பர் 6 நடைபெற்றது. சமஸ்திபூர் மாவட்டம், சரைரஞ்சன் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டு இருந்த ஒரு கல்லூரிக்கு அருகே ஒப்புகை வாக்குச்சீட்டுக்கள் சிதறிக் கிடந்தன. இதைத் தொடர்ந்து மாவட்ட உதவி தேர்தல் அதிகாரியை கண்துடைப்பாக பணி நீக்கம் செய்தார்கள். வாக்குப்பதிவு முடிந்து அனைத்து வாக்கு இயந்திரங்களும் ஆவணங்களும் சீல் வைக்கப்பட்டு ஐந்து அடுக்கு காவல்துறை கட்டுப்பாட்டில் கல்லூரி கட்டிடத்திற்குள் வைக்கப்பட்டிருந்த அதிமுக்கியமான ஆவணங்கள் எப்படி தெருவில் கிடக்க முடியும்?

இவை அனைத்தையும் தமிழ்நாட்டு வாக்காளர்கள் மனதில் வைக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் வாக்கை உறுதி செய்ய வேண்டும். தங்கள் குடும்பத்தினர் வாக்கை உறுதி செய்ய வேண்டும். தேர்தல் பணியில் இருப்பவர்கள், தங்கள் வாக்குச் சாவடியில் உள்ள அனைவர் வாக்குகளையும் உறுதி செய்ய வேண்டும். அந்த வாக்குகளை மிகச் சரியாக செலுத்த வைக்க வேண்டும். வாக்குப் பதிவு இயந்திரத்தையும் இறுதி வரை கண்காணிக்க வேண்டும்.

பீகாரில் சொல்லப்பட்ட வாக்காளர்களுக்கும், பதிவான வாக்காளர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. இவை அனைத்தும் இறுதி வரை கண்காணிக்கப்பட வேண்டியது ஆகும். முன்பெல்லாம் யாரோ தவறு செய்வார்கள். தேர்தல் ஆணையத்தில் முறையிடலாம். ஆனால், இப்போது முறைகேட்டுக்கு தேர்தல் ஆணையத்தையே பயன்படுத்தும் அளவுக்கு பா.ஜ.க. தனது திருகு வேலைகளைக் காட்டுகிறது.

சிறுபான்மையினர் வாக்குகள் நீக்கப்படலாம். பா.ஜ.க.வினரது எதிர்ப்பு வாக்குகள் பறிபோகலாம். இங்கு தற்காலிக பணிக்காக வந்திருக்கும் வட மாநிலத்தவரை இங்குள்ள வாக்காளர் பட்டியலில் வலிய சேர்க்கலாம். இவை அனைத்தையும் எச்சரிக்கையுடன் கண்காணிக்க வேண்டும்.

**பா.ஜ.க.வின் முக்கியமான குறி தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளா ஆகிய மூன்று மாநிலங்கள் ஆகும். இங்கெல்லாம் பா.ஜ.க.வால் எதையும் செய்ய முடியவில்லை. அதனால் தேர்தல் ஆணையத்தைப் பயன்படுத்தப் பார்க்கிறார்கள். மகாராஷ்டிரா, டெல்லி சட்டமன்றத் தேர்தல்களில் பல லட்சம் வாக்காளர்களை நீக்கினார்கள். குறுகிய காலத்தில் போலி வாக்காளர்களைச் சேர்த்தார்கள். அதனால்தான் பீகார் தேர்தல் முடிவுகளை அந்த மாநில சட்டமன்றத் தேர்தலாகச் சுருக்கிப் பார்க்கக் கூடாது. அங்கு நடந்தவைகளில் இருந்து பாடம் கற்று, எச்சரிக்கையுடன் கண்காணிப்புடன் செயல்பட வேண்டும்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.11.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில், கட்டடம் மற்றும் மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம் மற்றும் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு சென்னை, அண்ணா நகரில் 97 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடத்தினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (17.11.2025) தலைமைச் செயலகத்தில், ஹரியானாவில் நடைபெற்ற 2025ஆம் ஆண்டிற்கான 18வது Urban Mobility India மாநாட்டில் தேசிய அளவில் கலந்து கொண்ட 17 பெருநகரங்களில் நாட்டிலேயே சிறந்த பொதுப் போக்குவரத்து அமைப்பு கொண்ட நகரமாக சென்னை மாநகர் போக்குவரத்து கழகம் (சென்னை) தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான விருது, சிறந்த பல்முனை போக்குவரத்து ஒருங்கிணைப்புடன் கூடிய மெட்ரோ இரயில் என்ற பிரிவின் கீழ், நகர்ப்புற போக்குவரத்தில் சிறந்து விளங்குவதற்கான விருது மற்றும் சிறந்த பயணிகள் சேவை மற்றும் திருப்தி அளிக்கும் மெட்ரோ இரயில் என்ற பிரிவின் கீழ் நகர்ப்புற போக்குவரத்துக்கான பாராட்டுச் சான்றிதழ் ஆகிய விருதுகளை அமைச்சர் சா.சி.சிவசங்கர், துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள், டாக்டர் கே.கோபால், எம்.ஏ.சித்திக், சுன்சோங்கம் ஜடக்சிரு ஆகியோர் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உள்ளனர்.

### சனாதன சக்திகளின் பிரித்தாளும் சூழ்ச்சி குறித்து விழிப்புணர்வு

# ஜன.2 முதல் வைகோ சமத்துவ நடைபயணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திருச்சியில் துவக்கி வைக்கிறார்!

சங்கரன்கோவில், நவ. 18 - சனாதன சக்திகளின் பிரித்தாளும் சூழ்ச்சி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ம.தி.மு.க. மேற்கொள்ளும் சமத்துவ நடைபயணத்தை வரும் ஜன. 2ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் துவக்கி வைக்க உள்ளதாக வைகோ தெரிவித்தார்.



ம.தி.மு.க. சமத்துவ நடைபயணத்திற்கு வீரர்கள் தேர்வு, அக்கட்சியின் பொதுச்செயலாளரான வைகோவின் சொந்த கிராமமான தென்காசி மாவட்டம், திருவேங்கடம் தாலுகா, கலிங்கப்பட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடந்தது.

இதற்காக நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் இருந்து திரளாகப் பங்கேற்ற தொண்டர்கள், தங்களுக்கு வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை நிரப்பிக் கொடுத்தனர்.

இதையடுத்து அவர்களை தொண்டரணி, இளைஞரணி, மாணவரணி என 3 வகையாகப் பிரித்து நேர்காணல் நடத்தி தேர்வு செய்த வைகோ, நடைபயணத்தில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விளக்கிக் கூறினார்.

இதைத்தொடர்ந்து வைகோ செய்தியாளர்களிடம் கூறுகையில், ‘வைதீக, சனாதன சக்திகளின் பிரித்தாளும் சூழ்ச்சி குறித்தும், போதைப் பொருட்கள் தடுப்பு குறித்தும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் சமத்துவ நடைபயணத்தை தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின், வரும் ஜன. 2ம் தேதி திருச்சி உழவர் சந்தையில் இருந்து துவங்கி வைக்க உள்ளார்.

துவக்க விழாவில் கூட்டணி கட்சித் தலைவர்களான இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொய்தீன், தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

இதையடுத்து மணப்பாறையில் கம்யூனிஸ்ட் கட்சியினரும், கொங்குநாடு மக்கள் கட்சி தலைவர் ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் உள்ளிட்டோரும் கலந்து கொள்கின்றனர்.

மதுரையில் ஜன. 12ம் தேதி நடைபெறும் நிறைவு விழா பொதுக்கூட்டத்தில் வைரமுத்து, நடிகர் சத்யராஜ், மே 17 இயக்கத்தலைவர் திருமுருகன் காந்தி, பட்டிமன்றப் பேச்சாளர் ஞானசம்பந்தன் உள்ளிட்டோரும் கலந்து கொள்கின்றனர்.



வேலூர் மாவட்டம், காட்பாடி பிரம்மபுரத்தில் புதிய பேருந்து நிலையத்தை கழக பொதுச் செயலாளர், நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி., ஒன்றியச் செயலாளர் எஸ்.சரவணன், ஒன்றியக் கவுன்சிலர் இலக்கியா சந்துரு, ஊராட்சி மன்றத் தலைவர் ராதாகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# “அரசியல் சட்டத்தைக் காப்பாற்றும் கட்சி தி.மு.க.தான்!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத்திருவிழா’ நிகழ்ச்சியின் ஒருபகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக்கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தில் ‘தேசிய அரசியலில் தி.மு.க.’ என்ற தலைப்பில், கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. அவர்கள் ஆற்றிய உரை :**

## ஆ.ராசா எம்.பி.
## கழகத் துணைப் பொதுச் செயலாளர்

“ஒரு காலகட்டத்தில் டெல்லி கிழக்கைப் பார்த்த காலம் உண்டு. ஜின்னா அவர்கள் தனிநாடு கேட்ட 1930-ஆம் ஆண்டு முதல் 1947-ஆம் ஆண்டு வரை வடக்கு, கிழக்கைப் பார்த்தது. இந்தியா ஒரே தேசமாக இருக்கவேண்டும் என்று காந்தி விரும்பினார். ‘ஒருவேளை இந்த நாடு துண்டாடப்படுமானால், அது என்னுடைய இறந்த உடலின் மீதுதான் நடக்கும்’ என்று சொன்னார். ஆனால், அவர் உயிரோடு இருக்கும்போதே நாடு துண்டாடப்பட்டது. அப்போது, டெல்லி கிழக்கைப் பார்த்தது. பாகிஸ்தான் உருவானது.

### டெல்லி திரும்பிப் பார்த்தது

அதற்குப் பிறகு, டெல்லி மேற்கைப் பார்த்தது. காங்கிரஸ் பேரியக்கம் சுதந்திரத்திற்கு பின்னால் ஆட்சி அதிகாரத்தை பெற்ற நேரத்தில், மேற்கிலே இருந்த மேற்கு வங்காளம், தனித்த தத்துவ அடையாளத்துடன் கொள்கை அடையாளத்துடன் டெல்லியைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

அதற்குப் பிறகு 1951-இல் தத்துவத் தலைவர் தந்தை பெரியாரும் அண்ணாவால் உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகமும் தனித்தனியாக சமூக நீதிக்காக ஒரு மிகப்பெரிய போராட்டத்தை நடத்தி, இந்தியாவின் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய இக்கட்டுக்கு பண்டிதர் நேரு ஆளானார். இந்தியாவின் தெற்கிலே, தமிழ்நாட்டில் நடந்த போராட்டத்தால், அரசியல் சட்டம் முதன்முறையாகத் திருத்தப்பட்டபோது, டெல்லி தெற்கை திரும்பிப் பார்த்தது. தெற்கைத் திரும்பிப் பார்க்க வைத்த இயக்கம் இந்த திராவிட இயக்கம்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில், 1960-ஆம் ஆண்டு, தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஈ.வி.கே.சம்பத் அவர்களுக்கு பண்டிதர் நேரு அவர்கள் ‘தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளாதவரை நாங்கள் இந்தியைத் திணிக்க மாட்டோம்’ என்று ஒரு கடிதம் எழுதினார். அன்றைக்குத் தேசிய அரசியலில் தி.மு.க-வின் பங்கு முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது.

### வேறுபட்ட தனித்துவம்

1963-ஆம் ஆண்டு திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையைத் தடுப்பதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அந்த சட்டம் கொண்டு வந்த நேரத்தில் அண்ணா ‘நாங்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள்’ என்று சொன்னார். ‘இப்படிச் சொல்லிக் கொள்வதால், நான் பெங்காளிகளுக்கோ, மராட்டியர்களுக்கோ எதிரி அல்ல. ஆனால், இந்த உலகத்துக்கு வழங்குவதற்கு. எங்களிடத்தில் தனித்த, வேறுபட்ட, தனித்துவம் கொண்ட திடமான கொள்கைகள் இருக்கின்றன’ என்று அண்ணா சொன்னபோது, நாடாளுமன்றம் திரும்பிப் பார்த்தது.

அந்தக் காலகட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டவர், திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் திவானாக இருந்த சி.பி.ராமசாமி.

அப்போது நாடாளுமன்றத்தில் அண்ணா கேட்டார், ‘எங்களைப் பிரிவினைவாதிகள் என்று சொல்கிறீர்களே, நீங்கள் தேசிய ஒருமைப்பாட்டுக்கு என்று ஒருவரை நியமித்திருக்கிறீர்களே சி.பி.ராமசாமி, அவர் யார் தெரியுமா? ‘சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைக்க வேண்டும்’ என்று வல்லபாய் படேலும் நேருவும் விரும்பியபோது, திருவிதாங்கூர் சமஸ்தானத்தை இந்தியாவோடு இணைக்க விரும்பாமல், பாகிஸ்தானோடு இணைப்பதற்கு ஜின்னாவிடம் பேரம் பேசியவர். அவர் உங்களுக்கு ஒற்றுமைவாதி, எங்கள் இனத்துக்கு, மொழிக்கு உரிமை கேட்டால், நாங்கள் பிரிவினைவாதிகளா?’ என்று அழுத்தமாகக் கேட்டார்.



### காப்பாற்றும் மாநில கட்சி

இந்தியாவின் அரசியல் சட்ட முகப்புரையில், சொல்லப்பட்டிருக்கின்ற இறையாண்மை, சமதர்மம், மதச்சார்பின்மை, ஜனநாயகம் என்னும் நான்கு கொள்கைகளையும் காப்பாற்றும் மாநிலக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான்.

1971-இல் இந்தியா - பாகிஸ்தான் போர் நடந்தபோது, இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்காக நிதியளித்து இறையாண்மையைக் காப்பாற்றிய முதலமைச்சர் கலைஞர். 1999-இல் கார்கில் யுத்தத்தின்போதும் நிதியளித்த முதலமைச்சர் கலைஞர்.



திராவிட முன்னேற்றக் கழகம் வாஜ்பாயுடன் கூட்டணி வைத்தபோது, குறைந்தபட்ச செயல் திட்டத்தை முன்வைத்தது. காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருக்கும் சிறப்பு அதிகாரமான 370-வது பிரிவை நீக்கக்கூடாது, ராமர் கோயில் கட்டக்கூடாது, பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவரக்கூடாது என்று குறைந்தபட்ச செயல்திட்டத்தை உருவாக்கினார் கலைஞர்.

மதச்சார்பின்மைக் கொள்கையை வெளியில் இருந்து காப்பாற்றுவது வேறு. ஆனால், வாஜ்பாயோடு கூட்டணி வைத்து, அவர்கள் கையைக் கட்டிப் போட்டு, இந்த மூன்றையும் செய்யாமல் காப்பாற்றிய இயக்கம், தி.மு.க-வும் தலைவர் கலைஞரும்தான்.

### திராவிட முன்னேற்றக்கழகம்

இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது, வங்கிகளை தேசியமயமாக்க வேண்டும் என்று முயன்றபோது, அப்போது நிதியமைச்சராக இருந்த மொர்ராஜி தேசாய் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால், ‘இந்திராகாந்தி அம்மையார் அவர்களே, சமதர்மம் ஓங்க வேண்டும், அதுதான் எங்களின் கொள்கை, எங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். அந்த சட்டத்தைக் கொண்டு வாருங்கள்’ என்று சொல்லி, அன்றைக்கு சமதர்மத்தைக் காப்பாற்றியது திராவிட முன்னேற்றக்கழகம்.

அதேபோல் நெருக்கடிநிலைக் காலத்தில் இந்திய ஜனநாயகத்துக்கு ஆபத்து வந்தபோது அதை எதிர்த்துப் போராடிய இயக்கம் திராவிட முன்னேற்றக்கழகம்.

புதிதாகத் திருமணமான மணமகன் இல்லறத்தின் சுகத்தை எல்லாம் துவக்க வேண்டிய அந்த வயதில், சிறையை... சிலுவையை ஏற்றுக்கொண்டாரே, அப்படி ஜனநாயகத்துக்கு ஆபத்து வந்தபோது அதை தடுத்து நிறுத்தியது மட்டுமல்ல, அதற்காக ஆட்சியை இழந்து எதிர்த்து நின்று குரல் கொடுத்தது தி.மு.க.தான்.

இப்படி இந்திய அரசியல் சட்ட முகப்புரையில் உள்ள இறையாண்மை, மதச்சார்பின்மை, சோசலிசம், ஜனநாயகம் ஆகியவற்றைக் காப்பாற்றிய ஒரு மாநிலக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர, கலைஞரைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்?

### அண்ணாவின் ஆளுமை

பெரியாரை ஒரேயொரு முறை பார்த்திருக்கிறேன். அவரின் தத்துவங்களை இன்னும் படித்துக்கொண்டே இருக்கிறேன். அண்ணாவின் ஆளுமையை நான் அறிவேன். கலைஞரோடு அருகிலேயே பயணித்தவன். ஆனால், பெரியாரைக் காட்டிலும், அண்ணாவைக் காட்டிலும், கலைஞரைக் காட்டிலும் நான் நேசத்தோடும், பாசத்தோடும் இந்தத் தலைவர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை நேசிக்கிறேன். என்ன காரணம்? அண்ணாவை குறைத்து மதிப்பிட்டதாக அர்த்தமல்ல, பெரியாரைப் புறந்தள்ளியதாக பொருள் அல்ல, கலைஞரைக் கைவிட்டு விட்டதாக அர்த்தமல்ல. பெரியார் இருந்தபோது ஆபத்து இல்லை, நாடாளுமன்றத்தில் ஜனசங்கத்துக்கு உறுப்பினர்கள் இல்லை. அண்ணா இருந்தபோது ஒற்றை இலக்கத்தில் உறுப்பினர்கள். கலைஞர் இருந்தபோது பா.ஜ.க ஆட்சிப்பொறுப்புக்கு வந்தது. ஆனால், குறைவான நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

ஆனால், நம் திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் காலத்தில், பா.ஜ.க. அசுர பலத்துடன் ஆட்சியில் அமர்ந்திருக்கிறது. ‘ஒரே மொழி, ஒரே தேசம், அரசியல் சட்டத்தை தூக்கி எறிவோம்’ என்று அவர்கள் சொல்கிறபோது ‘நாங்கள் டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல்’ என்று சொல்லக்கூடிய ஒரு மகத்தான தலைவனை இந்திய அரசியலில் நாம் பெற்றிருக்கிறோமே, அவருக்குள்தான் பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் இருக்கிறார்கள்.

அரசியல் சட்டத்தின்படி, இந்தியா ஜனநாயக, சோசலிஷ, மதச்சார்பற்ற குடியரசு. குடியரசு என்றால் என்ன? எல்லோருக்கும் ஒரு ஓட்டு.

### முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்

சமூகத்தில் நீ மேட்டுக்குடியாக இருக்கலாம், கீழே இருக்கலாம், பணத்தில் நீ பெரிய ஆள், சமூகத்தில் பிரித்து வைக்கப்பட்டிருக்கலாம், ஆணும் பெண்ணும் வேற்றுமையாக இருக்கலாம், ஆனால், குடியரசு என்று வந்துவிட்டால், எல்லோருக்கும் ஒரே மரியாதை. அந்த மரியாதைக்கும் குழி தோண்டுகின்ற செயல்தான், தொகுதி மறுவரையறை. உத்தரப் பிரதேசம் போன்ற நான்கு மாநிலங்களைக் கொண்டு இந்தியாவின் தலைவிதியை நாங்கள் நிர்ணயிப்போம் என்று சொல்கின்ற ஜனநாயகத்திற்கு எதிரான மறுவரையறை அதை எதிர்த்து நிற்கிற துணிச்சல், அதற்காக ஒரு மாநாடு கூட்டி, இந்தியாவின் தலைவர்களை எல்லாம் சென்னைக்கு அழைத்து இந்திய அரசியலைத் திரும்பி பார்க்க வைக்க ஒரு தலைவன் இருக்கிறார் என்றால், அந்த ஒரே தலைவன் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்தான்.

அண்ணா நாடாளுமன்றத்திலே போராடிய போது, முழங்கியபோது, நேரு இருந்தார். கலைஞர் மாநில உரிமைகளுக்காகப் போராடியது இந்திராகாந்தியுடன். அவர்கள் எல்லாம் மாபெரும் ஆளுமைகள். ஆனால், இன்றைக்கு நாம் யாரோடு போராடிக்கொண்டிருக்கிறோம்? மோடியோடும் அமித்ஷாவோடும்.

இந்தப் போராட்டம் தொடரும். இந்தப் போராட்டம் தொடரும் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம், நாளைக்கு இந்த இயக்கத்தை வழிநடத்தப் போகிற தம்பி நம் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். அவர்தான் இந்தப் போராட்டத்திற்கான உதாரணம். சனாதனத்துக்கு மண்டியிடாத ஒரேயொரு தலைவன் எங்கள் இயக்கத்துக்குப் போதும். அதுதான் இந்திய அரசியலில் நாங்கள் பெறப்போகிற வெற்றி. ●

## அனைவரும் போற்றும் அறிவுத்திருவிழா!

கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகரும் ‘உயிர்மை’ பதிப்பாளருமான கவிஞர் மனுஷ்யபுத்திரன், முற்போக்கு புத்தகக் காட்சியைப் பாராட்டி, தன் முகநூல் பக்கத்தில் ஒரு பட்டியலை இட்டிருக்கிறார். அதில் இருந்து...

1. வள்ளுவர் கோட்டம் முற்போக்கு புத்தகக் காட்சியில் முழு நாள் புத்தகக்காட்சி நடைபெறும் நாட்களில் மதிய உணவு ஸ்டால்களிலேயே விநியோகிக்கப்பட்டது.

சென்னை புத்தகக்காட்சியில் மதிய உணவிற்காக ஸ்டால்களில் இருப்பவர்கள் கூட்ட நெரிசலில் வரிசையில் நிற்கவேண்டும். ஒரு நபர் மட்டும் இருக்கும் கடைகளில், சாப்பிட போவது ஒரு பெரிய பிரச்சினை. டோக்கன் கொடுப்பதற்கு பதில் உணவையே ஸ்டாலில் கொண்டு வந்து கொடுத்து விடுவது சிறந்த ஏற்பாடு. முற்போக்கு புத்தகக்காட்சி வழிகாட்டுகிறது.



2. முற்போக்கு புத்தகக்காட்சியில் குளிர்சாதன இயந்திரங்கள் பொருத்தப்பட்டு மக்கள் வெக்கையில் வேகாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இதைச் செய்வது சென்னை புத்தகக்காட்சியில் சாத்தியமே.

3. முற்போக்கு புத்தகக்காட்சியில் கடைக்காரர்களுக்கு தனி வாட்ஸ்அ-ப் (Whatsapp) குரூப் ஒன்று உருவாக்கி அத்தியாவசியமான தகவல்களை உடனுக்குடன் பகிர்கிறார்கள்.

4. அரசியல் நூல்களுக்கான தனி புத்தகக்காட்சி என்பது, இது போன்ற ஒரு வகைப்படுத்தலை சென்னை புத்தகக் காட்சியில் செய்வதற்கு வழி காட்டுகிறது. அரசியல் - இலக்கிய நூல்கள் ஒரு வரிசையிலும், குழந்தைகளுக்கான நூல்கள் இன்னொரு வரிசையிலும், சமையல் சமய நூல்கள் இன்னொரு வரிசையிலும், ஆங்கில நூல்கள் மற்றொரு வரிசையிலும் என பல்வேறு வகைகளில் பகுக்கப்பட்டால், அந்தந்த வாசகர்கள் தேடி அலையாமல் தங்களுக்கான நூல்களைப் பெறலாம்.

திராவிட மாடல் ஒரு சிறந்த புத்தகக்காட்சி மாடலை செய்து காட்டுகிறது.